# கோட்டை, மண்டைதீவு முகாம்களை மூட ஆலோசனை

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 20-8-86 புதன் (ஆவணி 4 துல்ஹஜ 13) முழக்கம் 197

யாழ்ப்பாணம் கோட்டையிலும், மண்டைதீவுச் சந்தியிலும் அமைக்கப்பட்டுள்ள ராணுவ முகாம்களை விரைவில் மூடிவிட அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றது. அடுத்த ஓரிரு வாரங்களில் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படலாம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு ஏற்ற சுமுக நிலையை ஏற்படுத்த அரசு விரும்புவதே இதற்குக்காரணம் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்விரு முகாம்களும் போதிய பாதுகாப்பின்றி இருப்பதாகவும், அடிக்கடி போராளிகளின் தாக்குதலால் இங்கு உயிரிழப்புகள் இடம்பெறுவதாகவும், இங்கிருப்பவர்கள் உணவு, குடிநீர், நடமாட்டம் போன்ற விடயங்களில் பல கஷ்டங்களை அனுபவிப்பதாகவும், இதனாலேயே இம்முகாம்களை முதலில் மூட யோசிக்கப்படுவதாகவும் வெளிவட்டாரங்களில் கூறப்படுகின்றது.

## ★ போராளிகள் குழுத் தலைவர்கள் இந்திய அரசுக்கு அளித்த உறுதிமொழி

# முயற்சியை குழப்ப மாட்டோம்!

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்க மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்தச் செயலையும் செய்யமாட்டோம் என தமிழீழப் போராளிகள் குழுக்களின் தலைவர்கள் வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க உறுதிமொழி அளித்துள்ளனர்.

புதுடில்லி வட்டாரங்கள் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தன. பிரஸ்தாப தலைவர்கள் திரு வெங்கடேஸ்வரனுடன் இரு மணித்தியாலங்களாக ஆலோசனை நடத்தியுள்ளனர் என்றும் செவ்வாய்க்கிழமை சென்னை திரும்பவிருந்த இவர்கள் மேலும் ஓரிரு தினங்கள் தங்கியிருந்து வெளியுறவு மந்திரி திரு. பி. சிவ்சங்கரையும், திரு ஜி. பார்த்தசாரதியையும் சந்தித்துப் பேசவுள்ளனர் என்றும் மேற்படி புதுடில்லி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் பற்றி போராளிகள் குழுக்கள் தலைவர்கள் குறிப்பிடுகையில் 'பொறுத்திருந்து பார்க்கவேண்டும்' என்றனர் என்றும் இவ்வட்டாரங்கள் கூறின.

## ★ அந்நிய ஏகாதிபத்திய சக்திகளினாலேயே இலங்கையின்

# இனப்பிரச்சினை அதிகரித்துள்ளது

## சோவியத் துணை ஜனாதிபதி கூறுகிறார்

(சென்னை)

இந்தியாவிலும் இலங்கையிலும் ஏகாதிபத்திய சக்திகள் பிரச்சினைகளை ஏற்படுத்தி இவ் இரு நாடுகளும் நட்புறவுடன் வாழ்வதைத் தடுக்க முயல்வதாக இந்தியாவில் இப்பொழுது விஜயத்தை மேற்கொண்டுள்ள சோவியத் துணை ஜனாதிபதி எஸ். பி. தக்லிவ் சென்னையில் நேற்று கருத்துத் தெரிவித்தார்.

தனது மூன்றுநாள் சென்னை விஜயத்தின் முடிவில் செய்தியாளர்கள் மகாநாட்டில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையை சோவியத் யூனியன் கண்டிக்கிறது. இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென்று சோவியத் யூனியன் நம்பிக்கை கொண்டுள்ளது" எனவும் தெரிவித்த திரு. தக்லிவ், "ஏகாதிபத்திய சக்திகளின் குறுக்கீட்டினால் தான் இந்த இனப் பிரச்சினை சிக்கலாயுள்ளது" எனவும் குறிப்பிட்டார்.

இப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு நிரந்தர அமைதி ஏற்படுவதையே சோவியத் யூனியன் விரும்புகிறது எனவும் அவர் மேலும் கூறினார்.

பஞ்சாப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்ட அவர் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளாலேயே இப் பிரச்சினை ஏற்படுத்தப்பட்டது எனக் குறிப்பிட்டார். ஆனால் இலங்கைப்பிரச்சினைக்கும், பஞ்சாப் பிரச்சினைக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

### கோட்டைக்குள்ளிருந்து நடந்த

## இரண்டு சூட்டு சம்பவங்களில் இருவர் படுகாயமுற்றனர்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை இரண்டு மணித்தியால இடைவெளியில் மேற்கொள்ளப்பட்ட இரு வெவ்வேறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குருநகர் அலுப்பாந்தி வீதியில் நின்ற இருவர் படுகாயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முதலாவது சம்பவம் நேற்றுக்காலை எட்டுமணி போல் நடந்தது. அச்சமயம் அலுப்பாந்தி புகையிரதக் கடவைக்கு அருகில் மாட்டு வண்டியைச் செலுத்திச் சென்ற குருநகரைச்

—6ம் பக்கம் பார்க்க

## இலங்கைகுழு இந்தியா சென்றுள்ளது

மாகாணசபை அமைக்கப்பட்டால் அதற்குஎவ்வாறு நிதியைப் பெற்றுக்கொள்வது என்

—6ம் பக்கம் பார்க்க

## படையினரின் மாடி வீடு குண்டு வைத்துத் தகர்ப்பு!

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை முகாமில் உள்ள ராணுவத்தினர் தமக்கு பாதுகாப்பாக பயன்படுத்தி மறைந்திருந்து பொது மக்களை சுட்டுக்கொண்டு வந்த மாடி வீடு நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப்புலிகளால்குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இந்த மாடி வீட்டில் ராணுவத்தினர் மறைந்திருந்து சுட்டதால் கடந்த சில நாட்களில் ஆறு பேர் பலியாகினர் சுமார் பதினைந்து பேர் காயமடைந்தனர். ராணுவ முகாமுக்கு மிக அண்மையில் உள்ள இந்த மாடிக்கட்டடத்தை விடுதலைப் புலிகள் மிகவும் சாதுரியமான முறையில் தகர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து முகாமில் இருந்து சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

## பொத்துவிலில் கண்ணிவெடி 6 சிப்பாய் காயம்; ஒருவர் பலி

(மட்டுநகர்)

பொத்துவிலில நேற்று நண்பகலளவில் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதலொன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியாக நேர்ந்தது. மற்றும் ஆறு பேர் காயமடைந்தனர்.

இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. பொத்துவில் கோமாரி வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கண்ணிவெடித் தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்கவென தென்னாபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கவசவண்டியொன்றே இக் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்குண்டதாகவும் இதனாலேயே உயிரிழப்புகள் குறைவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சேதத்துக்குள்ளான கவச வண்டி மற்றொரு இராணுவ கனரக வண்டியால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டது.

## பீரங்கி படகு தாக்குதலால் பாதுகாப்பு அரண் சேதம்

நேற்றுக் காலை பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு மூன்று பாரிய பீரங்கிக் கப்பல்கள் மூலமும், சிறிய படகுகள் மூலமும் ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகளால் சினைப்பர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளையில் பீரங்கிப் படகிலிருந்து தரையை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்கள் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதையடுத்து பீரங்கிப் படகுகள் அனைத்தும் பின்வாங்கியதாக புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லலித்துடன் 90 நிமிடம் பேசினர்

(கொழும்பு)

கூட்டணியினர் நேற்று தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் சுமார் தொண்ணூறு நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். சட்டம், ஒழுங்கு, பொலிஸ் நிர்வாகம் ஆகியன பற்றியே முக்கியமாக ஆராயப்பட்டதாகவும், சில விடயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## குடாநாட்டில் தினசரி மோட்டார் சைக்கிள் விபத்து

யாழ். அரசினர் வைத்தியசாலையின் விபத்து வார்ட்டில் பெரும்பாலான கட்டில்களை தற்பொழுது மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கியோரே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது தினம்தோறும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பல மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் இடம்பெற்று வருவதினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதிக வேகமாக, அனுபவமில்லாதவர்கள் கவலையீனமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்துவதனாலேயே அதிகளவான விபத்துக்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்களின் போது காயம

—6ம் பக்கம் பார்க்க

# சவூதி அரேபியாவிற்கு

துறைமுகம், பிளாஸ்டிக், வைத்திய சாலை ஆகியவற்றுக்கு தொழிலாளர்களுக்கான பயண ஒழுங்குகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். விரும்புவோர் நேரில் வரவும்.

**K. லிங்கம்**

காளுவன் சந்தி, சுழிபுரம். R/25316

# பிரயாண ஒழுங்குகள்

## டென்மார்க், கனடா, லண்டன்

எமது முகவர் குறுகிய காலத்துக்குள் அழைத்துச் செல்கிறார், மத்தியகிழக்கிற்கு.

தச்சுத்தொழில், மேசன், ஓட்டோ எலற்றிஷியன், A. C. டெக்னீஷியன், பிளம்பர், ஹாபர் கிளீனர்ஸ், சுப்பவைஸர்கள், (CHEPO HARBOURரில் வேலை செய்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்) பிளாஸ்ரிக் கொம்பனி, ஆகியவற்றிற்கு இரண்டு வாரத்துக்குள் பிரயாண ஒழுங்கு மேற்கொள்ளப்படுகிறது. 20ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- முன்பு என்னுடன் மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு தொடர்பு கொண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

தொடர்பு கொள்ளும் முகவரி:

**N. சிவஞானம்**
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,
பஸ் இலக்கம் 770

R/25310

## வரி விளம்பரம்

Electical Engineering. (London Exam.) PART I & PART II. Start on: 20-8-86. JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, Stanly Road, Jaffna. R/25313

## காணவில்லை

கடந்த திங்கட்கிழமை காலை எனக்குரிய இரண்டு பிரிட்டிஷ் அஞ்சற் கட்டளைகள் விலா சமிட்ட கவருடன் பரந்தன் சந்தையில் தவறிவிட்டது. தேடி எடுத்து தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். இரத்தினராசா, பாலா கிறீம் கவுஸ், பரந்தன் சந்தி B/1473

## மயானத்திலுமா ?

(அராலி)

அராலி பூனுவோடை மயான தங்குமடத்தின் மீது ?ருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளனர். மேற்படி மடத்தின் கூரை ஜன சந்தடியில்லாத நேரங்களில் பகுதி பகுதியாக திருட்டுப் போகின்றது.

இதனால் மேற்படி மடத்தினை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சில காலத்திற்கு முன்னர் மேற்படி மயான கிணற்றினை சில விசமிகள் இடித்து வீழ்த்தியிருந்தனர். இது குறித்து மேற்படி மயான சபையினர் கவலை தெரிவித்துள்ளனர்

பாழடைந்திருந்த, நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த மேற்படி மடத்தினை கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தான் மேற்படி சபையினர் திருத்தியமைத்திருந்தனர்.

மேற்படி மயான தகன மேடை திருத்தத்திற்கென பத்தாயிரம் ரூபாவை யாழ். மாவட்ட சபையின் அராலி உப அலுவலகத்தினர் இவ் வருடம் ஒதுக்கியுள்ளனர்.

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

✱ யாழ். மவுண்ட்காமல் வீதி போல் வசந்தி தம்பதியின் மகன் றெமிக்குயூஸ் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ கைதடி மேற்கு சந்திரன் சாந்தா தம்பதியின் மகள் மிருநாளினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ மல்லாகம் சிவகரன் பத்மினி தம்பதியின் மகன் பவானந்தன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

# சவூதியில் வேலை வாய்ப்பு ஒழுங்குகள்

| | | | |
|---|---|---|---|
| 1 கூலியாட்கள் | (30பேர்) | 550 | றியால் |
| 2. மேசன்மார் | (3 பேர்) | 700 | ,, |
| 3. பொருத்துநர்கள் | (3 பேர்) | 700 | ,, |
| 4. ஷொவெல் இயந்திர -இயக்குநர்கள் | (3பேர்) | 600 | ,, |
| 5. போர்க் லிவ்ற் இயக்குநர்கள் | (3 பேர்) | 600 | ,, |
| 6. எலெக்ரீசியன்ஸ் | (3 பேர்) | 800 முதல் 1000 றியால் வரை | |
| 7. விவசாயிகள் (Farmers) | (6 பேர்) | 550 | ,, |
| 8. விவசாய மேற்பார்வையாளர் | (3பேர்) | 700—750 றியால் வரை | |
| 9. சாரதிகள், தோட்டக்காரர் | (3பேர்) | 700 | றியால் |
| 10. மெக்கானிக்மார் | (3 பேர்) | (வயது 45 வரை) | |

டென்மார்க் — பயண ஒழுங்குகள்
குவைத்/லிபியா — கிளீனர்ஸ்

தொடர்பு கொள்ளவும்:

**ஏ. அன்னம்மா**
இந்திர கிரி,
நவாலி றோட், ஆனைக்கோட்டை. R/25318

# திட்டமிட்ட சேமிப்பு வாழ்வை வளமாக்கும்

● ஆலோசனை
● வசதியான திட்டங்கள்
● வழிகாட்டல்

அனைத்தையும் வழங்குவது :

அபிவிருத்தி நிதியம்

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் சேமிப்பை பிரதேச அபிவிருத்திக்கான முதலீடாக மாற்றுவதற்கு உதவும் நிறுவனம்.

B/1468

# "தொழிற் பயிற்சிகள்"

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்பை பெறுவதற்கும் வெளிநாடுகளில் மேல் படிப்பு தொடரும் மாணவர்களிற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

## ❋ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, டெலிவிசன் டெக் தொழிற்பாடு, திருத்தும் முறை என்பன இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

முன்னைய கட்டணம் 1250/- தற்போதைய கட்டணம் 400/-

## ❋ எலக்ரிக்கல் வயறிங்

வீட்டு மின்சாரவேலை, மின்சாரபொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

முன்னைய கட்டணம் 500/- தற்போதைய கட்டணம் 250/-

## ❋ றீவைண்டிங்

மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார பொருட்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

முன்னைய கட்டணம் 1000/- தற்போதைய கட்டணம் 400/

## ★ Computer Programming

(Basic Language)

Radio shach, B. B. C., Commoder ஆகிய Computer களில் 50 மணித்தியால செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.

முன்னைய கட்டணம் 1250/- தற்போதைய கட்டணம் 400/-

## ★ Diploma in Draughtsmanship

(a) Engineering Drawing
(b) Engineering Construction
(c) Engineering Materials
(d) Builders Quantities
(e) Draughtsmanship

முன்னைய கட்டணம் 850/- தற்போதைய கட்டணம் 300/-

## ❋ Hotel Management

(French, German Language)

முன்னைய கட்டணம் 1250/- தற்போதைய கட்டணம் 600

குறிப்பு:- (1) ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும், எமது நிறுவனத்தின் 5வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் பொதுப் பரீட்சையில் சித்தியடையும் 25 மாணவர்களிற்கு மட்டும் மேற்குறிப்பிட்ட மிகக் குறைந்த சலுகைக் கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும்.
(2) பயிற்சியில் இரு பாலாரும் சேரலாம் 27-08-86 க்கு முன் விண்ணப்பத்தை நேரில் பெற்று விண்ணப்பிக்கவும்.
(3) பயிற்சியின் முடிவில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட London Based சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு

# Jaffna Technical Institute

52/1, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.
தபாற்கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை) நெல்லியடி.
141, கண்டி வீதி, (யூனியன் பேக்கறி அருகாமை) சாவகச்சேரி.

R/24678.

# பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

நாம் மீண்டும் டென்மார்க் பயணங்களை ஆரம்பித்துள்ளோம்

● கனடா செல்ல விரும்புவோரை எதுவித இடையூறுகளுமின்றி எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.
● டென்மார்க் செல்ல விரும்புவோரை வாரா வாரம் எமது முகவர் நேரடியாகக் கூட்டிச் செல்வார். வியாழக்கிழமை செல்லவிருக்கும் பிரயாணக் கண்டாயத்தில் சேரவிரும்புவோர் 21-08-86 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.
● ஜேர்மன் செல்வதற்கு உங்களுக்கு பயண ஒழுங்குகள் மிக விரைவில் செய்து தரப்படும்.
● சவூதி அரேபியாவுக்கு வீதி திருத்தும் வேலைக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், மேசன், தச்சுத் தொழிலாளர்கள் பதவிக்கும் செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட், 6 புகைப்படங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் ஒழுங்குசெய்து தரப்படும்.

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

R/25304

லயன்ஸ் கழகம்

# ஏழைகளின் துயர் நீக்க பெரும் சேவை புரிகிறது

(சாவகச்சேரி)

''சேவைமனப்பான்மையின் அடிப்படையிலே வளர்ந்து கொண்டு வருவதோடு பல்லாயிரக் கணக்கானோர் துயரினைத் துடைத்துள்ள லயன்ஸ் கழகத்தின் சேவையை நான் மதிக்கிறேன். ஏழைகள் துயர் துடைக்கும் இக் கழகத்தின் பாரிய தொண்டினில் நானும் பாரபட்சமின்றிப் பங்கெடுத்துக் கொள்வேன்.

இவ்வாறு சாவகச்சேரி லயன்ஸ் கழக புதிய தலைவராகப் பதவி ஏற்ற வைத்திய கலாநிதி பேதுறு பிலிப்ஸ், ஜே.பி. குறிப்பிட்டார்.

செயலாளராக சுந்தரலிங்கமும், பொருளாளராக லயன்ஸ் வி-பி.சுந்தரலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நியமனம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உள்ள ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், ஸ்ரீசித்திவிநாயகர் மகா வித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றில் சங்கீதம் கற்கும் மாணவர்கள் நலன் கருதி இம்மாதம் முதல் இப்பாடசாலைகளுக்குச் சங்கீத ஆசிரியைகள் நியமிக்கப்பட்டுள்ளனர்

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இவ்வாசிரியர் இடங்கள் காலியாகவிருந்தன யாழ். கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் மேற்கொண்ட தீவிரமுயற்சியின் பேருகவே இப்பகுதி பாட்சாலைகளுக்கு இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நல்லை ஆதீன ஆண்டு விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஆண்டு விழாவாகிய ஆதீன குருமணியின் இருபதாவது பீடாரோஹண விழா இம் மாதம் இருபத்தாரும் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகம், பஜனை, பூஜை, திருமுறை ஓதல் முதலியவற்றுடன் சங்கீத பூஷணம் எல். திலகநாயகம்போலின் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் இடம்பெறும்.

இளைப்பாறிய உதவி ஆணையாளர்

# ஆளுமையால் நிர்வாகத்தில் பெருமை பெற்றது உறுதி

(சாவகச்சேரி)

''கூட்டுறவுத்துறையில் உதவி ஆணையாளராக திரு.கந்தையா இருந்து மேற்கொண்ட சேவை அவரின் ஆளுமைத் திறனை பிரதிபலித்தது. அதுமட்டுமல்ல பாவனையாளர்களுக்கு உணவு நெருக்கடி ஏற்படாது கூட்டுறவு மூலம் மக்கள் தேவைகளைச் சுமூகமாக நிறைவேற்றி வந்த இவரின் சேவை நலனை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது''.

இவ்வாறு கூட்டுறவு உதவி ஆணையாளராக இருந்து அண்மையில் இளைப்பாறிய திரு எம். கந்தையாவுக்கு, கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. எஸ். சண்முகலிங்கம் கூறினர்.

சங்கத் தலைவர் தி அ திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இச் சேவை நலன் பாராட்டு வைபவத்தில், அவரும் இளைப்பாறிய ஆணையாளரின் சேவைகளைப் பெரிதும் பாராட்டினர்.

கிராமத்தின் வளர்ச்சி

# சனசமூக நிலையங்கள் மூலமே வெளிப்படும்

(அளவெட்டி)

''தமிழ் மக்களின் அன்றுட வாழ்க்கையே போராட்டமாக விஸ்வரூபமெடுத்துள்ள இன்றைய காலகட்டத்தில் எம் மக்களிடையே ஒற்றுமை என்பது முக்கிய பங்கை வகிக்க வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வுஎன்ற முதுமொழியைப் பின்பற்றி கிராம மக்கள் செயல்படல் அவசியம்.

ஒவ்வொரு கிராமத்தின் வளர்ச்சியையும், அப்பகுதி மக்களின் வளர்ச்சியையும் கணிக்கவேண்டுமானல் அங்கு இயங்கிவரும் சனசமூக நிலையங்களின் வளர்ச்சியை வைத்தே கண்டுபிடிப்பது சுலபம். நூல் நிலையங்களை, பாலர் பாடசாலைகளை நிறுவுவது பெரிதல்ல. அவற்றை அழியவிடாது இறுதி வரை காப்பதே பெரும் பொறுப்பாகும்''

மேற்கண்டவாறு அளவெட்டி தெற்கு அம்பாள் சனசமூக நிலையத் திறப்புவிழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அளவெட்டி வடக்கு சமாதானசபை தலைவர் திரு. வை. சூரியபாலன் குறிப்பிட்டார்.

சனசமூக நிலையத் தலைவர் செல்வன் சச்சி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேலும் பலர் பேசினர்கள்.

வேறுபாடுகளைக் களைந்தால்

# கிராமப் பிணக்குகள் சுலபத்தில் நீங்கிவிடும்

(சுன்னுகம்)

''எமது கிராமத்திலேற்படும் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். இதன் காரணமாகக் கிராம மக்கள் சகல வேறுபாடுகளையும் மறந்து ஒருதாய் வயிறறில் பிறந்தவர்கள் போல் செயற்பட வேண்டும். அவ்வாருன நிலையேற்படும்போது சுலபமாக எதையும் தீர்த்துக் கொள்ள முடியும். சகல மக்களினது ஒத்துழைப்பும் நாம் அமைக்கும் இணக்க சபைக்குத் தேவையானதாகும். எமக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அரசின் நீதிமன்றங்களை நம்பியிருந்த காலம் மலையேறிவிட்டது. மக்களால் உருவாக்கப்பட்ட இணக்க சபையின் மூலம் எல்லாவற்றையும் தீர்த்துக் கொள்ளுவோம்''

இவ்வாறு கீரிமலை கூவில் சிவானந்த சனசமூக நிலையத்தினரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இணக்க சபைக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஆ. வீமன் குறிப்பிட்டார்.

திரு. ஆர். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர். தலைவர்: திரு. வி. விஜயேந்திரன், உப - தலைவர்: திரு. ஆர். சோமசுந்தரம், செயலாளர்: திரு. ஆ, வீமன், உப-செயலாளர்: திரு. எஸ். மகேந்திரன், பொருளாளர்: திரு. பொ. கந்தையா, நாலு பேர் கொண்ட நிருவாகக் குழுவும் தெரியப்பட்டது.

# கிளிநொச்சி அகதிகள் நிலை

கிளிநொச்சி மாவட்டத்தில் சென்ற ஜூன் நான்காம் திகதி முதல் தொடரும் அனர்த்தங்கள் அனைவரும் அறிந்தது. நகரில் மையம் கொண்டுள்ள இராணுவ முகாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதனுல் சூழஇருந்த அரச திணைக்களங்கள், பாடசாலைகள், சந்தை, வர்த்தக நிலையங்கள் ஆகியன யாவும் மூடப்பட்டுள்ளன. ஆனந்தபுரம், கனகபுரம், திருநகர், கணேசபுரம், 5 ம் வாய்க்கால், 4 ம் வாய்க்கால், பரவிப்பாஞ்சான், திருவையாறு, இரத்தினபுரம் ஆகிய கிராமங்களும் முற்ருக இடம் பெயர்ந்துள்ளன. 5800 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக அரச வட்டாரங்கள் ஏற்றுக் கொள்கின்றன. 43 பேர் உயிர் இழந்துள்ளதாக இதுவரை பெற்ற தகவல்கள் கூறுகின்றன. தற்போதும் இடையிடையே பொதுமக்கள் பெருமளவில் கைது செய்யப்படுகின்றனர்.

இடம் பெயர்ந்தவர்கள் பாதுகாப்பான ஏனைய கிளிநொச்சி கிராமங்களிலும், தமது முல்லைய யாழ்ப்பாண கிராமங்களிலும் குடியேறி உள்ளனர். இடம் பெயர்ந்தவர்களுக்கான அகதிகள் முகாம் ஒன்று ஆரம்ப தினமே உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் தொடக்கப்பட்டது 6500 பேருடன் ஆரம்பிக்கப்பட்டது பின்னர் பாடசாலை ஆரம்பம் கருதி அம்முகாம் கோணவிலுக்கு இடம் மாற்றப்பட்டது. எட்டாம் வாய்க்கால், வட்டக்கச்சி ஆகிய இடங்களிலும் இரு முகாம்கள் இயங்கின. சென்ற யூலைமாத முடிவுடன் இருமுகாம்களும் மூடப்பட்டு தற்போது கோணவில் ப.நோ.கூ.ச மண்டப முகாமே தொடர்ந்து இயங்குகிறது. உருத்திரபுரம் அகதிகள் சேவைக்குழுவின் நிர்வாகத்தில் இயங்கும் இம் முகாமிற்கு சென்றமாதம்வரை சர்வோதயம், பல்கலைக் கழக மாணவர்மன்றம், கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக்குழு ஊடாக அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், கோணவில் கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்கந்தபுரம் அத்தியாவசிய சேவைக்குழு ஆகியன உதவின.

அரச உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஏனைய உதவிகளும் நிறுத்தப்பட்ட நிலையில் இம்முகாமும் மூடப்படும் நிலைக்கு ஆளாவது. எந்த தொடர்பும் தங்கிடமும் இல்லாத, தம் பழைய இடங்களுக்கு திரும்பிச்செல்ல முடியாத,தம் பழைய சிறுவியாபாரம், தரகு,நாட்டாமை தொழில்களை இழந்த ஏதிலிகளே இங்கு மீதமாக உள்ளவர்கள்.மொத்தம் 52 குடும்பங்களை சேர்ந்த 310 பேர் உள்ளனர். இவர்களில் 75 வீதம் பெண்களும் குழந்தைகளும். தற்போது தென்இந்திய திருச்சபை, கிளிநொச்சி பரந்தன் ரோட்டறிக்கழகம் ஆகியவற்றின் தற்காலிக உணவுப் பொருள் உதவிகளுடன் இம்முகாம் தொடர்ந்து இயங்குகின்றது. அகதிகளின் நிலையை அவதானிக்கும் போது தொடர்ந்து இயக்கப்பட வேண்டிய தேவை அத்தியாவசியமாக தெரிகின்றது. இது தொடர்ந்து இயங்க பொதுநல ஸ்தானங்களின் உதவி அவசியமாகிறது. இவர்களின் உழைப்பை குறித்த ஒரு முறையில் பயன்படுத்தி உணவுத் தேவையின் ஒரு பகுதியை ஈடுசெய்யக் கூடிய திட்டங்களும் இவர்களால் விரும்பப்படுகின்றன.

இடர்பாடுகளும் தேவைகளும் மிகுந்த அகதிகளுக்கு உதவ விரும்பும் பொது நல ஸ்தாபனங்கள் தங்கள் பார்வையை இவர்கள் பக்கம் திருப்பலாம்.

—ப. வை. ஜெயபாலன்.

இன்னலுற்று வாடும் இந்த அகதிகட்டு உதவ விரும்பும் மனம் கொண்டோர் தங்கள் உதவிகளை ''ஈழமுரசு இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வு நிதியம்'' 140, நாவலர் வீதி (மனோகரா சினிமா அருகாமை), யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரிலோ அன்றில் தபால் மூலமோ அனுப்பி வைத்துதவலாம். பெறப்படும் பொருள்கட்கு பற்றுசீட்டு வழங்கபபடுவதுடன், பொருட்கள் அகதிகட்கு ஒபபடைக்கப்பட்ட விபரமும் நன்கொடையாளர்கட்கு தெரிவிக்கப்படும்.

இணைப்பாளர்,
புனர்வாழ்வு உதவி நிறுவனங்கள் ஒன்றியம்.

நீண்டகாலசேமிப்புக்குரிய

# பயிர்வகை உற்பத்தியில் ஊக்கம் மிகவும் தேவை

(சங்கானை)

''பரவலாக பல பயிர்களை நாற்றுமேடை நிறுவியும், நல்ல இன விதைகளை சேர்த்தும் சுழற்சி முறையில் பணப் பயிர்களை குறைத்து குரக்கன், வரகு, சாமை, பயறு, உளுந்து, எள்ளு போன்ற நீண்ட கால சேமிப்புக்கு உதவக் கூடிய தன்னிறைவு பெறும் வகையில் உற்பத்தி நடவடிக்கை களில் கூடுதலாக ஈடுபட வேண்டும்'' என யாழ். மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

சங்கானை- கிழக்கு- தொட்டிலடியில் விவசாயப் பயிர்களின் முன்மாதிரி பரீட்சார்த்த துண்டங்களின் அறுவடை வயல் விழா விவசாயிகள் குழு பொதுச் செயலாளர் திரு. க. வீரசிங்கம் அவர்களின் கமத்தில் தொல்புரம் விவசாய போதனுசிரியர் திரு. ச. தம்பிராஜா தலைமையில் நடைபெற்றது.

சங்கானை-கிழக்கு பிரிவு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜீ. சிதம்பரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. வீரசிங்கத்தின் முன்மாதிரி செயல் பாடுகளையும், முயற்சிகளையும் விவசாயத்தில் பல பரிசோதனை முயற்சிகளில் வெற்றி கண்டுள்ளமையையும் பாராட்டி வாழ்த்துப்பாவழங்கி மேற்படிவிழாவில் சபையினர் சார்பில் ''விவசாய மன்னன்'' எனும் பட்டத்தை தொழிலதிபர் திரு. க. கனகராஜா, ஜே. பி. வழங்கிக் கௌரவித்தார். விவசாய இலாகா பாட விதான போதனுசிரியர் திரு. வி. கதிரமலை பல தரப்பட்ட விவசாயிகளின் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும், கோரிக்கைகளுக்கும் சிறந்த முறையில் ஆலோசனைகள் வழங்கினர்.

தொட்டிலடி பகுதி விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. வை.பாலகிஷ்ணன் நன்றியுரை நிகழ்த்தினர். பெருந்திரளான விவசாயப் பெருமக்கள், குடும்பப் பெண்கள் உட்பட பல பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்ட மேற்படி வைபவத்தில் விதைகள், மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. தொட்டிலடி பிரதேசத்தில் கோப்பி,கசுக்கொட்டைநாற்று மேடைகள் பல விவசாயிகள் அமைக்க முன்வந்துள்ளார்கள் என்பதும் இங்கு விசேடமாக குறிப்பிடத்தக்கது.

## நிதி ஒதுக்கீடு

(சுன்னுகம்)

கீரிமலை பிரஜைகள் குழுவினரும், மக்கள் சனசமூக நிலையத்தினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனுக கீரிமலை சனசமூக நிலையத்துக்குப் புதிய கட்டடம் அமைத்துக்கொள்ளுவதற்கு இருபததையாயிரம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா விரைவில் நிகழவிருக்கிறது.

உ
முருகா
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986



இன்று 11-ம் திருவிழா

காவடிச் சிந்து
நல்லை மாநகரை நண்ணு — வீதி
நாலும்ப்ர தக்ஷணம் பண்ணு — முழு
நாளும் பொழுதும் கந்த வேளின் பெருமை சொல்லல்
ஞானம் — வரும் — மோனம்!

—சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

### உதய சிந்தனை

சாகலாம் என கடலில் விழுந்தவன் கை நிறைய முத்துக்களோடு திரும்புவதுண்டு; முத்து எடுக்கச் சென்றவன் செத்துப்போவதுமுண்டு. —ஓர் ஆங்கில அறிஞர்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

20-8-86 புதன்கிழமை (அக்ஷய) ஆவணி 4

# "ஜனநாயக சர்வாதிகார" பாகிஸ்தான் அரசாட்சி

ஆசிய நாடுகள் சிலவற்றில் இடம்பெற்றுவரும் அராஜக ஆட்சியின் பலனாக, எதிர்க்கட்சிகள் நடத்திவரும் எதிர்ப்புப் போராட்டத்தினால் ஆட்சியாளர்கள் மேலும் சர்வாதிகார நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற அரசியல் மாற்றமும், மோசடி அரசியலில் ஈடுபட்ட ஜனாதிபதி நாட்டைவிட்டே ஓட்டம் பிடித்ததும் உலகறிந்த சங்கதி.

இதனையடுத்து பெண் அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது.

எதிர்க்கட்சி வரிசைகளில் இருக்கும் ஆண் அரசியல் வாதிகளுக்கு வராத துணிச்சல், பெண் தலைவர்களுக்கு ஏற்பட்டமைக்கு பிலிப்பைன்ஸ் புரட்சி ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டது.

பங்களாதேஷில் இடம்பெற்ற தேர்தலின்போது இடம்பெற்ற ஊழல்களையும், எர்ஷாட்டின் ஆட்சியின் "யோக்கியத்" தனத்தையும் ஒரு பெண் அரசியல்வாதியால்தான் மக்கள் முன் கொண்டுவரக் கூடியதாகவிருந்தது.

இலங்கை ஜனாதிபதிக்குச் சிம்மசொப்பனமாக விளங்குபவர் சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ அவர்கள்.

அணிசேரா நாட்டுத் தலைவர்களின் கூட்டத்துக்கு ஜனாதிபதியால் செல்ல முடியாது போனமைக்குக் கூட, ஸ்ரீமாவோ இன்று ஆரம்பிக்கும் நாடுதழுவிய எதிர்ப்புக் கூட்டமும் முக்கிய காரணமாகும்.

இதனை நாம் விரிவாக நேற்று இதே பகுதியில் ஆராய்ந்து விபரித்திருந்தோம்.

எமது அண்டை நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானில் இப்போது பலப் பரீட்சை ஒன்று நடைபெறுகின்றது.

"பெனாஸிர் ஒரு பெண்மணி; அவரிடம் எனது முழுப் பலத்தையும் காட்ட விரும்பவில்லை" என்று 'நக்கல்' பாணியில் சில காலத்துக்கு முன்னர் கூறிய பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா, இப்போது பெனாஸிர் அலையின் முன்னால் நின்று தத்தளிக்கின்றார்.

தான் செய்வது சரியா பிழையா என்றுகூட சிந்திக்க முடியாதவராக பல தவறான போக்குகளை அவர் முன்னெடுத்துச் செல்வது, பெனாஸிர் பூட்டோவுக்கு பாகிஸ்தான் மக்கள் அளித்துவரும் மகோன்னத ஆதரவினால் ஏற்பட்டுள்ள பயத்தின் விளைவேயாகும்.

பெனாஸிர் ஒரு பெண்ணாக இருப்பதால் அவருக்குத் தனது பலத்தைக் காட்டவிரும்பவில்லை என்று கூறிய ஸியா, பாகிஸ்தான் சிறைக்கூடத்தின் இரும்புக் கதவுகளின் பலத்தை அறியச் செய்யுமாறு பெனாஸிரை உள்ளே தள்ளிப் பூட்டி வைத்திருப்பது விந்தையாக இல்லையா?

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தவே பதவியை ஏற்றுள்ளேன் என்று கூறிக்கொண்டு இராணுவ ஆட்சியை ஏற்படுத்திய ஸியா உல் ஹக், முன்னாள் ஜனாதிபதிக்கு மரணதண்டனை வழங்கி தனது 'ஜனநாயகச் சிறப்பை' வெளிப்படுத்தினார்.

இதனையடுத்து விதவை பூட்டோ தனது பிள்ளைகள் சகிதம் வெளிநாடு செல்ல நேர்ந்தது.

பல வருடங்களாகத் தேர்தலை நடத்தாது, இராணுவ ஆட்சியை நடத்தி வந்த ஸியா இறுதியில் தேர்தலைச் சந்திக்க நேர்ந்ததாயினும், இலங்கையில் நடைபெற்ற தேர்தல்கள் போல ஒருவாறு 'சரி செய்து' தாமே அந்தக் கதிரையில் அமர்ந்துள்ளார்.

இதனையடுத்தே 'பெனாஸிர் அலை' விஸ்வரூபமெடுத்தது.

பெனாஸிர் கட்சியே பாகிஸ்தானின் மக்கள் கட்சியாக இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன்பயனாக, பெனாஸிரைக் கைதுசெய்து அரசு சிறையில் வைத்துப் பூட்டியுள்ளது.

இதனையடுத்து பாகிஸ்தான் முழுவதும் கலவரங்கள் மூண்டுள்ளன.

அரச படைகளை நேருக்கு நேர் எதிர்க்குமளவுக்கு மக்கள் சக்தி அணிதிரண்டுள்ளது.

பாகிஸ்தானின் "ஜனநாயக சர்வாதிகார ஆட்சிக்கு" சாவு மணி அடிக்கும் நடவடிக்கைகளை மக்கள் ஒன்றுதிரண்டு எடுத்துள்ளனர்.

மக்கள் படையின் இந் நடவடிக்கை, பாகிஸ்தானை மற்றொரு பிலிப்பைன்ஸாக மாற்ற வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

★ ★ நேற்றைய தொடர்ச்சி

# கிழக்கின் முஸ்லிம் மக்களும் தமிழ்மொழி மாநிலத்துள் சேர்க்கப்படல் வேண்டும்

மேலும் தொடர்ந்து, அமிர்தலிங்கம்: 'ஓரளவு சுய ஆதிக்கத்துடன் மாகாண சபை ஒன்றை நிறுவுதலால், ஒரு தாயக அபிவிருத்தி விளையும்' எனக் கூறினார்.

'தமிழரின் ஐக்கியம் பேணப்படுவதை நாம் விரும்புகிறோம். அதனாலேயே பகிரங்கமான எமது கூற்றுக்களில், ஓர் ஐக்கிய தமிழ்க் கூறு உண்டாதல் அவசியம் எனும் அம்சத்தை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். உள்ளதைச் சொல்வதானால், ஒரு தமிழ்க் கூறு எனும் எண்ணத்தைச் செயற்பட வைத்தற்கு, கிழக்கு மாகாண எல்லைகளில் சில மாற்றங்கள் செய்யப்படலாம். இங்ஙனம், யதார்த்த பூர்வமான ஒரு நிலைமையை கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம் விளக்கினார்.

சட்டமும் ஒழுங்கும் எனும் விடயம் தொடர்பில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மேற்கொண்டிருந்த நிலைப்பாடானது மாகாணப் பொலிஸ் ஒழுங்கமைப்பு எனும் அம்சத்தையும் குறிப்பிட்டது. பொலிஸ் ஒழுங்கமைப்பு இந்திய மாநிலங்களில் உள்ளதைப் போன்று இருத்தல் வேண்டும் எனக் கூட்டணி கோரியது என்று தெரிவிக்கப்பட்டது.

நீதாசன அமைப்பு முறையும் இந்திய மாநிலங்களில் உள்ளது போன்றே இருத்தல் வேண்டும். மாகாணங்களுக்கு உயர் நீதிமன்றங்கள் நீதி பரிபாலனத்திற்கென இருக்கும். அரசாங்கத்தின் அண்மைநாட் பிரேரணைகள் மேற்படி அம்சங்களைக் கொண்டனவாக அமைதல் வேண்டும் எனவும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி நிலைப்பாடு மேற்கொண்டது. காணி. காணிக் குடியமர்வு தொடர்பில், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்—மகாவலி, மாதுறு ஓய போல்வன—ஒரு தேசியக் கொள்கைக்கு அமைந்தனவாதல் வேண்டும் என இலங்கை அரசு வாதிடுகிறது. இதனைக் கூட்டணி நிராகரித்தது. தேசியக் கொள்கை, கோட்பாடு, எப்படியாகத்தான் இருந்தாலும் என்ன, தமிழர்க்குரிய காணி அந்த அந்த மாகாண சபைக்குத்தான் உரித்தாக்கப்படுதல் வேண்டும். உகந்தது எனச் சபை காணும் அல்லது கருதும் வழியில் அது அக்காணியைப் பயன்படுத்த முடியும்.

பேச்சுக்கள் கொழும்பில் நடந்து பல நாட்களாகியும் முன்னேற்றம் அதிகம் காணப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. திரு. அமிர்தலிங்கம் கூட இதே கருத்தைத்தான் உறுதிப்படுத்தினார். 'பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்ட முன்னேற்றம் உண்டு என ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது. இது சரியானதல்ல. இங்கு முன்னேற்றம் காணப்படவேயில்லை. வாத விடயங்களை நாங்கள் இன்னமும் கலந்துரையாடிக் கொண்டுதான் இருக்கிறோம்.' இவ்வாறு கூறிய அமிர்தலிங்கம், கலந்துரையாடல்களின் தற்போதைய போக்குப்பற்றி நிலவிய தப்பான எண்ணங்களை விரைந்து அகற்றினார்.

இதற்கிடையில் காணிக் குடியமர்வுபற்றிய சில பிரேரணைகளை மாற்றியமைக்க இணங்கினார், அமைச்சர் காமினி திஸாநாயக்க. அது இருண்ட முகிற் கூட்ட மத்தியில், ஓர் ஒளிக் கீற்றுப் பாய்ச்சியதற்கு ஒப்பாயிற்று. காணிக்குடியமர்வின் மீதான சில அரசாங்கப் பிரேரணைகள் பின்னிணைப்பு- சி-யிற் காணப்பட்டன. கொழும்பை விட்டுக் கூட்டணி இந்தியா நோக்கிப் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக, இவ்விடயத்தின் மீதான திருத்தப்பட்ட ஆவணம் அதனிடம் கையளிக்கப்பட்டது.

சட்டமும் ஒழுங்கும் எனும் வாத விடயத்தையிட்டுப் பாரதூரமான பிணக்கு எதுவும் இல்லை, எனவும் அமிர்தலிங்கம் ஒத்துக்கொண்டார். 'யூனியன்' அமைச்சர் பி.சிதம்பரம் தலையில் இலங்கை வந்த இந்திய தூதுக் குழுவுக்கு இலங்கை அரசாங்கத்தினால் சில பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன. அவற்றிலும் குறித்த சில சீர்திருத்தங்களை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சிபார்சு செய்து இருந்தது.

காணியும் காணிக் குடியமர்வும் என்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்று. அதே போன்றதுதான் சட்டமும் ஒழுங்கும் எனும் இரண்டாவது விடயம். இவை இரண்டும் தொடர்பான திருத்தப்பட்ட நகல்களுக்கு கூட்டணி தனது பதிலை அளித்த பின்னர், இது விடயத்தில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்பது நியாயமானது ஆகும். அதே சமயம், இத்தகைய அச்சாணிமுக்கியத்துவம் வகிக்கும் தமிழ் மொழிப்பிராந்தியம் எனப்படும் வாதவிடயம் இன்னமும் முட்டுக்கட்டைநிலையிலேயே ஸ்தம்பிதம அடைந்து நிற்கிறது. அன்றியும், இம் முக்கிய காரியங்களுள் அதுவே முதன்மையானதுமாகும்.

அடுத்து இலங்கையின்கிழக்கு மாகாணத்தில் வதியும்முஸ்லீம்கள்பற்றியகூட்டணியின் நிலைப்பாட்டைச் சற்று நோக்குவோம். தமிழர் தேசத்தின் ஒரு பகுதியினர் என்பதே கூட்டணியின் கணிப்பு. மேலும், அவர்கள் வாழும் பிராந்தியங்களும் தமிழ் மொழிப் பிராந்தியத்தினுள் அடங்குவதையே கூட்டணி விரும்பி நிற்கிறது.

ஆனாலும் 1977 ஆம் ஆண்டு இலங்கையில்நடந்தேறிய தேர்தல் விஞ்ஞாபனத்தின் கண் கூட்டணி ஓர் உரிமையை ஒப்புக் கொண்டிருந்தது. முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக வாழும் பிராந்தியங்களின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும் பொருட்டு, முஸ்லீம்களின் சுயநிர்ணய உரிமையைக் கூட்டணி ஏற்றிருந்தது.

'புரன்ட்லைன்' நிருபருக்கு அளித்த பேட்டியின் போது கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் தெரிவித்ததாவது: பேச்சுவார்த்தை மேசைதான் இவ்விடயங்களைத் தெளிவாக்கிக்கொள்வதற்கு ஏற்ற இடம், அங்கு பல்வேறு தரப்பினர் மத்தியிலும் குறித்த ஒரேயளவு பரஸ்பரம்கருத்துப்பரிமாற்றம் நடைபெறும் வாய்ப்புஉண்டு. அதனாலேயே தமிழ் மொழிப் பிராந்தியம் அல்லது கூறு என அதனைப் பொதுப்படப் பெயரிட்டுள்ளோம் என்கிறார் அமிர்தலிங்கம்.

இலங்கையின் வடக்கு,கிழக்கு மாகாணங்கள் இரண்டிற்குமிடையில் ஒரு பொது விதானம் அல்லது சேர்ந்தியங்கும் வழியை வகுக்குமுகமாக எத்தனையோ ஆலோசனைகளைப் பல்வேறுவட்டாரங்கள் முன்வைத்துள்ளன. ஆயினும், அவற்றில் ஏதொன்றாவது 'உருப்படியானது' ஆகவில்லை. அவற்றுள் இரண்டை இங்கு எடுத்து இயம்புகிறோம்.

இலங்கையின் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும் பெருந்தோட்டத் துறையின் மாபெரும் தொழிற் சங்கமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமாகிய எஸ். தொண்டமான் ஒரு ஆலோசனையைக் கொணர்ந்தார். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம்களுக்கு இந்திய உபகண்டத்தில் அமைந்த பாண்டிச்சேரியில் உள்ளது போன்ற ஒரு பிரிவை அமைத்து அளித்தல்; தமிழ் மீனவர்கள் வசிக்கும் கிழக்குக் கடலோரப் பிராந்தியத்தை வடக்கினுடன் இணைத்தல்; அம்பாறை மாவட்டத்தில் (சிங்களத் தேர்தல் தொகுதி புறநீங்கலாக) முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் மூன்று முஸ்லீம் வாக்காளர் பிரிவுகளையும் ஒன்றாக்கி ஒரு முஸ்லீம் மாகாணம் ஆக்குதல்; மட்டக்களப்பிலும் திருகோணமலை மாவட்டத்திலும் முஸ்லீம்கள் திரண்டு வாழும் நிலப் பரப்புகளையும் இம் முஸ்லீம் மாகாணத்தினுள் சேர்த்துக் கொள்ளல். இது ஒருபுறம் இருக்க, முஸ்லீம் 'லீக்' இலங்கையின் கிழக்கில் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று மாகாணங்களை உருவாக்குதல் வேண்டும்என ஆலோசனையொன்றை முன் வைத்துள்ளது.

(தொடரும்)

## கூட்டுக் குழு செயற்பாடு

(சுன்னாகம்)

மானிப்பாய் தொகுதியில் செயலாற்றி வரும் சகல விழிப்பு மன்றங்கள், விழிப்பு குழுக்கள், மக்கள் குழுக்கள், பிரஜைகள் குழுக்கள், சமாதான சபைகள் ஒருங்கிணைந்த கூட்டுக் குழுவின் பொதுக்கூட்டம் அண்மையில் பிரதேச விழிப்பு மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கூட்டுக் குழுவின் புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு.செ.தில்லைநாதன் (புதுமடம் சமாதான சபை) உப தலைவர் திரு.கே.சந்திரராசா (மானிப்பாய்வடக்கு விழிப்பு மன்றம்) செயலாளர் திரு. ஏ. எம்.அருணசலம் (மானிப்பாய் மத்தி விழிப்புமன்றம்) உப செயலாளர் திரு.க.தேவராசா (உடுவில் மக்கள் குழு) பொருளாளர் திரு. கே. தம்பிராசா (சுதுமலை சமாதான சபை)- பதினாறுபேர் கொண்ட நிருவாகசபையும் தெரியப்பட்டது.

இக்கூட்டத்தில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கல்வி, கலாச்சார, பொருளாதார, சுகாதார, நீதி, பாதுகாப்பு, கூட்டுறவு போன்ற சகல சீர்கேடுகளையும் ஆராய்ந்து மக்களின் தேவைக்கேற்ப காலத்திற்குக்காலம் சீர்செய்து கொடுப்பதெனத்தீர்மானிக்கப்பட்டது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சனசமூக நிலைய கொடுப்பனவு

(சுன்னாகம்)

கடந்த சில வருடங்களாக வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சனசமூக நிலையங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கையினை காங்கேசன்துறை உப அலுவலக அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு ரி. மகாலிங்கம் எடுத்து வருகின்றார். சனசமூக நிலையங்களுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

## மா, சீனி வந்தன

(சுன்னாகம்)

சீனி, மா என்பனவற்றுடன் இரு கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. 'மாத்தற' என்னும் பெயர் கொண்ட கப்பலில 975 மெற்றிக் தொன் மாவும், மற்றைய கப்பலில் 750 மெற்றிக் தொன் சீனியும் வந்துள்ளன கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கும் பணி விரைவாக நிகழ்ந்து வருகின்றது.

## 31-ம் திகதிவரை..

(உடுவில்)

உடுவில் கமநலச் சேவை நிலையத்தால் காலபோகச் செய்கைக்கு வழங்கப்படும் உருளைக் கிழங்குக்கான விண்ணபபங்கள் இம்மாதம் முப்பத்தோராம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படுமென கமநலச் சேவை பெரும்பாக உததியோகத்தர் அறிவித்துள்ளார்.

இவ் வருடமும் உள்ளூர் விதை உருளைககிழங்கே வழங்கப்படுமெனவும், விவசாயிகள் தாமாகவே நுவரெலியா, சீத்தாஎலியா சென்று கிழங்கைப் பெற வேண்டுமென மேலும் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த பாசறை

(சங்கானை)

நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் 14வது வருடாந்த பாசறை வைபவம் இயக்குநர் திரு. உ. ந. தேவ கடாட்சம் தலைமையில் 45 இளைஞர்கள், யுவதிகள் மூன்று குழுக்களாக மூன்று தினங்கள் தொடர்ந்து நடாததினார்கள்.

அங்கு பயிற்சிகளும், போட்டிகளும் பல தரப்பட்ட புதிய பாணியில மிகவும் கவர்ச்சியானதாகவும், பிரயோசனம் உள்ளதாகவும் காணபபட்டமையும் இங்கு குறிபபிடத்தக்கது.

## உணவு முத்திரை விநியோகம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை வடக்கு, தெற்கு கிராம சேவகர்கள் பிரிவிலுள்ளவர்களுககு உணவு முததிரைகள வரும் வியாழன், வெள்ளிக்கிழமை அவ்வப் பகுதி கிராமசேவகர் காரியாலயங்களில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் முத்திரைகளைப் பெறத் தகுதியுடையவர்கள், அடையாள அட்டை, பழைய உணவு முத்திரை அடிக்கட்டைகள், 12 வயதுக்குட்பட்டோரது பிறப்புசாட்சிப் பத்திரங்களுடன் வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## விவசாயிகள் கவனத்துக்கு

(சங்கானை)

மிளகாய்விதை, விதை உருளைக்கிழங்கு, கச்சான், உழுந்து, எள்ளு போன்ற சிறு தானியங்களின் விதைப் பொருட்கள் தேவையான விவசாயிகள் சகல பிரிவு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பம் செய்தால் விரைவில் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

விவசாய அறிமுக அட்டையுடன் உடன் அலுவலர்களை சந்தித்து தேவையான அளவு விபரங்களை விண்ணப்பித்து பதிவு செய்யும்படியும் வேண்டப்படுகிறது.

## கோரிக்கை பலிதம்

(சுன்னாகம்)

தமது தரத்தை உயர்த்துமாறு அரசாங்கத்தைக் கோரி வந்த அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்கத்தின் கடந்த ஆறுவருடக் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் மத்தியதர தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

## சிவதீட்சை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு ஸ்ரீ கந்தசாமி கோவிலில் இன்று 20ம் திகதி சிவதீட்சை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆலய மஹோற்சவமும் சுன்னாகம் ஸ்ரீ கதிரைமலைச் சிவன் ஆலய பிரதம சிவாச்சாரியாரான பிரமஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களினால் நடாத்தப்பட்டு வருகின்றது. தீட்சை வைப்பு சிவானந்த குருகுலத்தின் முயற்சியினாலும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கதிர்வேலாயுத சுவாமி ஆலய தர்மகர்த்தாக்களின் அனுசரணையினாலும் நடாத்தப்படவுள்ளது.

## உதவி கிடைக்கும்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த அண்மைக் காலங்களில் இராணுவத்தினராலும், கடற்படையினராலும், ஆகாயப் படையினராலும் ஏற்படுத்தப்பட்ட அட்டூழியங்களினால் விதவைகளாக்கபபட்ட விவசாயிகள், கமக்காரர் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்க வல்வை பிரஜைகள் குழு முயற்சி எடுத்துக்கொண்டது.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சங்கத்தினர், இப்படியான நிலையிலுள்ளவர்களுக்கு ஆடுகள் வளர்ப்பதற்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர் என வல்வைப பிரஜைகள்குழு தலைவர் தெரிவித்தார்.

## வயர்கள் பறிமுதல்

(அளவெட்டி)

தெல்லிப்பளை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் சட்டவிரோத மின் இணைப்பை ஏற்படுத்தியிருந்த பலருடைய மின் இணைப்புகள் தடை செய்யப்பட்டு, வயர்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

குழுவாகப் புறப்பட்ட மின்சாரசபை ஊழியர்கள் பன்னாலை, அம்பனை, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளிலுள்ள சட்டவிரோத மின் பாவனையாளர்களின் வயர்களே பறிமுதல் செய்யப்பட்டனவாகும்.

---

தமிழகத்தில் ரஷ்ய துணை ஜனாதிபதி; இரண்டு நாடுகளுக்கிடையிலான நட்புறவு உடன்படிக்கை

# வேறு எந்த நாட்டிற்கும் எதிரல்ல என்பது நிச்சயம்

(சென்னை)

'1971ம் வருடத்தில் உருவாக்கப்பட்ட சோவியத்- பாரத நட்புறவு உடன்படிக்கை பரஸ்பர ஒத்துழைப்பு அடிப்படையானதே- பற்ற எந்த நாட்டிற்கும் அது எதிரானதல்ல' என்று சோவியத் துணை ஜனாதிபதி திரு. தக்லிவ் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழகம் வந்துள்ள அவர் சென்னையில் சோவியத் - பாரத நட்புறவுக் கழகத்தின் தமிழகக் கிளையின் ஏற்பாட்டில் நிகழ்ந்த கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி உடன்பாடு உருவாக்கப்பட்டு பதினைந்து வருடங்கள் பூர்த்தியாவதையும், பாரதத்தின் முப்பத்தொன்பதாவதுசுதந்திரதினவிழாவையொட்டியும் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'உலக சமாதானத்தைப் பேணுவதை நோக்காகக் கொண்டு பாரதமும், சோவியத் யூனியனும் செயற்பட்டு வருகின்றன' எனவும் திரு. தக்லிவ் குறிப்பிட்டார்.

நடுநிலைமை நாடுகளுக்குத் தலைமை வகித்துப் பாரதம் உலக சமாதானத்திற்கு ஆற்றிவரும் பணியை அவர் பாராட்டினார்.

"120 நாடுகளுடன் சோவியத் யூனியன் கலாச்சாரத் தொடர்புகள் கொண்டிருக்கின்ற போதிலும் பாரதத்துடன் கொண்டிருக்கும் உறவு தலையாயது'' என்றார் அவர்.

பாரதம் உட்பட ஆறு நாடுகள் மெக்ஸிக்கோவில் சமீபத்தில் நடத்திய அணுவாயுதக் குறைப்பு வலியுறுத்தல் மாநாட்டையும் அவர் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

பாரதத்தின் பெரும்தொழில் திட்டங்களுக்கு தம் நாடு தொடர்ந்து உதவும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மத்திய இணையமைச்சர் திரு. அருணசலம், திருமதி வைஜயந்திமாலா பாலி எம். பி, நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

பஞ்சலோகத்திலான ஸ்ரீ நடராஜர் சிலையொன்று திரு. தக்லிவ்வுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

---

அணுவாயுத சோதனை நிறுத்தம்

# புதுவருடம்வரை ஒருதரப்பு தீர்மானத்தை நீடிப்பதென சோவியத் யூனியன் அறிவிப்பு

(மாஸ்கோ)

அணுவாயுதச் சோதனைத் தடை நடைமுறை என்ற தனது ஒரு தரப்பான நிலையைச் சோவியத் யூனியன் எதிர்வரும் புதுவருடம்வரை நீடிப்பதெனத் தீர்மானித்துள்ளது.

இதனைத் தொலைக்காட்சியில பேசும்போது சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ் தெரிவித்தார்.

அணுவாயுதப் போட்டியை முடிவுககுக் கொண்டுவரவேண்டுமென வற்புறுத்திய அவர் இந்த அரிய வரலாற்று வாய்ப்பை நழுவவிடாது அமெரிக்கா விவேகத்துடனும், மதிப்புடனும் பயன்படுத்திக் கொளள வேண்டுமெனவும் எடுத்துரைத்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து சோவியத் யூனியன் குறிப்பிட்ட ஒருதரப்பான முடிவை நடைமுறைக்குக் கொண்டுவந்தபின்பும் அமெரிக்கா பதினெட்டுச் சோதனைகளை நடத்தியுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

தனக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையே நடைபெறவுள்ள உச்சி மாநாடு உடன்பாடு ஒன்று இவ்வருடத்திலேயே உருவாக உதவும் என சோவியத் மக்கள் நம்புகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

இது இவ்வாறிருக்க, சோவியத்தின் இவ்வறிப்புக் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் 'இது அமெரிக்காவுக்கும் நேச நாடுகளுக்கும் ஏற்புடையதல்ல' என்றார்.

---

## எண்மர் மடிவு

(கராச்சி)

தேசிய ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கையின் போது உண்டான கலவரத்தில் எண்மர் மடிந்தனர். எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்களும், பொலிஸாருமே மோதிக்கொண்டனர்.

## 8 ஆயிரம் பேர் கைதாகினர்

(ஜொஹனஸ்பேக்)

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்ததன்பின் இதுவரை 8000 பேரே கைதாகியுள்ளதாக தென்னாபிரிக்க அரசு அறிவிக்கிறது. ஆனால் இத்தொகை 13 ஆயிரம் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.


அரிய வாய்ப்பு

ஈழமுரசு

அமுத கங்கை

செய்திக்கதிர் இருவார செய்தி விமர்சன இதழ்

வெளியீட்டாளர்கள் வழங்கும்

பரிசுப் பொதி

★ வித்தியானந்தம்
பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கட்டுரைத் தொகுப்பு

★ ஒளி சிறந்த நாட்டிலே
சாந்தனின் ருஷ்சிய பிரயாணக் கட்டுரை

★ ஈழமுரசு இரண்டாவது ஆண்டுமலர்

★ யாழ்ப்பாண யாத்திரை
பக்வன் ஆர். சிங்

★ அமிர்தகங்கை

இதழ் 1 முதல் 7 வரையும்
ஆகியவை சேர்ந்த பரிசுப் பொதியை இன்றே ரூபா 95/- செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன் மார்கழி வரையிலான அமிர்த கங்கைப் பிரதிகளும் இலவசமாக அனுப்பப்படும்.

விபரங்கட்கு:
சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 22437

ஈழமுரசு

## மாகாணசபை எதிர்ப்பு கூட்டம் இன்று தெற்கில் ஆரம்பம்

மாகாணசபை யோசனையைக் கண்டித்து சுதந்திரக் கட்சியும், பல பௌத்த சங்கங்களும் இணைந்து நடத்தும் கண்டன, எதிர்ப்புக் கூட்டங்கள் இன்று தென்னிலங்கையில் ஆரம்பமாகின்றன. நுகேகொடையில் இன்று நடைபெறும் கூட்டத்துக்கு அஸ்கிரிய பீடாதிபதி தலைமை தாங்குவார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா உட்பட சுமார் இருபது சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் உரையாற்றுவர்.

விடுதலைப் புலிகளின் நேர்த்தியான தாக்குதல்

# முகாமுக்கு காவல் நின்ற சிப்பாய் பலி; 'ஷெல்' வெடித்து முகாமுக்குள் சேதம்!

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு நேராக நேற்றுக் காலையில் ஒரு பெரிய பீங்கிக் கப்பலும் இரண்டு ரோந்து விசைப் படகும் வந்து நின்றன. பெரிய கப்பலிலிருந்து பல இராணுவத்தினரும், பொதிகளும், உணவுப் பொருட்களும் இறக்கப்பட்டன.

சிறிய பிளாஸ்ரிக் படகுகளில் இறக்கப்பட்டுக் கரையிலுள்ள துறைமுக அணைக்குவரும் வரையில விசைப்படகுகள் பாதுகாப்பாக வந்து போயின. கரையில் பாதுகாப்புக்காக முகாமிலிருந்து கரையோரமாக இராணுவத்தினரும் காவலுக்கு நின்றனர்.

இவ்விதம் முகாமின் மேற்கு புறமாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைப் பக்கமாக காவலுக்கு நின்ற இராணுவ சிப்பாய் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் சினைப்பர்' கொண்டு குறிபார்த்துச் சுட்டதில் அந்தச் சிப்பாய் அவ்விடத்திலேயே பலியாகி வீழ்ந்தார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவ முகாமிலிருந்தும் கடற்படைப் பீரங்கிக் கப்பல்களிலிருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு ஷெல் புலிகளின் பாதுகாப்பு அரண் முன்பாக வீழுந்து வெடித்தது.

கடற்படைப் பீரங்கித் தாக்குதல்களால் கரையோர வீடுகள், மதில்கள் பல சேதமாகியுள்ளன. இதேபோன்று முகாமிலிருந்தும் அடிக்கப்பட்ட ஷெல்களினுல் பருத்தித்துறை ஊர்மனைக்குள் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து புலிகளினுல் இரண்டு ஆர்ட்டிலறி ஷெல்கள் ஏவப்பட்டதாகவும், ஒன்று முகாமுக்குள் விழுந்து வெடித்தாகவும் அங்கும் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ராணுவத்தினர் பாலம் திருத்த வேலை தொடர்ந்து தோல்வி

கிளிநொச்சியில் போராளிகளால் தகர்க்கப்பட்ட கரடிப் போக்குப் பாலத்தை மீள திருத்தியமைப்பதில் அரசாங்க படைகள் தொடர்ந்தும்தோல்வியடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ராணுவத்தினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே போராளிகளால் இப்பாலம் சில வாரங்களுக்கு முன்னர் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

இப்பாலத்தைத் திருத்தச் செல்பவர்கள் கொல்லப்படுவார்கள் என போராளிகள் எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும், இதனைத் திருத்துவதற்காகக் கொண்டு செல்லப்படும் உபகரணங்கள் போராளிகளால் எடுத்துச் செல்லப்படுவதாகவும், இதனுல் இதனைத் திருத்தியமைக்க முடியாதிருப்பதாகவும் அரசாங்க அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்றைய சொற்பொழிவு

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று மாலை மூன்று மணிக்கு ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் "அருணகிரியார் மெய்யாக விளம்பிய ஒரு சொல்" என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

### திரும்பவும் கிடைக்கும்

தீகவாபிப் பகுதியில் முஸ்லிம் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகள் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்படுமென அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் திட்டம் பற்றி முஸ்லிம் மக்களுக்கு விளக்குமுகமாக நேற்று கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

### கப்பல் எரிகிறது

(லண்டன்)

துபாய் கடலில் பெரிய எண்ணெய்க் கப்பல் ஒன்று விமானத்தாக்குதலால் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாக நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப் பட்டது.

## கிழக்கு பகுதி சம்பவங்களுக்கு முஸ்லிம் இணக்கசபை கண்டனம்

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இரண்டு சிறுபான்மை இனவகளான தமிழ்-முஸ்லிம் மக்களை சிவில்நிர்வாகம் இல்லாத இக் காலகட்டத்தில் சில தீயசக்திகள் நடவடிக்கைகளினுல் பிளவுபடுத்தி ஆட்கடத்தல், கொள்ளை, தீவைப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதை வன்மையாக கண்டிப்பதாக யாழ். முஸ்லிம் இணக்க சபை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- கிழக்கில உள்ள முஸ்லிம்களும் நாடு முழுவதும் வாழும் ஏனைய முஸ்லிம்களும் இச்சம்பவங்களுக்கு தமது முழு எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும்.

இந்த நாட்டின் சிறுபான்மையினங்களான தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்துடன் செயற்பட்டு தமது நியாயமான உரிமைகளை வென்றெடுக்கவேண்டிய இக் காலகட்டத்தில் இவ்வாருன சம்பவங்கள் இரு இனங்களுக்கும் பெரும் நட்டத்தையும், விரோதத்தையும் ஏற்படுத்தும்.

எனவே நாம் விழிப்புணர்வை அதிகரித்து இவ்வாருன சம்பவங்கள் மேலும் இடம்பெருமல் அதை நிறுத்தி இவ்விரு இனங்களுக்கிடையில் மிக நெருங்கிய ஐக்கியத்தை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம். இதற்கு யாழ். முஸ்லிம் இணக்க சபையும், யாழ். முஸ்லிம் மக்களும் தமது பூரண ஆதரவை வழங்குவார்கள்.

### இரண்டு சூட்டு...

சேர்ந்த பி. நடராஜா (40) என்பவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அவர் துடையில் சூடுபட்டதும் வண்டிலிலிருந்து பாய்ந்து ஒடியதினுல் உயிர் பிழைத்தார்.

மற்றைய சம்பவம் காலை பத்து மணிபோல் நடைபெற்றது. அச்சம்பவத்தின்போது அலுப்பாந்தி வீதியோரத்தில் உள்ள கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த கண்பார்வை குறைந்த பி. செல்வராஜா (48) என்ற யாழ்நகர் வாசி படுகாயமடைந்தார்.

### புங்குடுதீவில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை

(சுண்டுக்குளி)

புங்குடுதீவில் நிலவி வரும் வரட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை விரைவில் போக்கித் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக யாழ். சமூக சேவைகள் அதிபர் திருமதி சிவசிதம்பரம் உறுதியளித்துள்ளார். இக் குடிநீர்ப் பஞ்சம் பற்றி யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசாவும், புங்குடுதீவு சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் திரு. சீ. வீ. பேரம்பலமும் மகஜர் சமர்ப்பித்து அவரிடம் நேரடியாக விளக்கினர்.

"இவ் வருடம் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினுல் புங்குடுதீவிலுள்ள கிணறுகளில் தண்ணீர் முற்ருக வற்றி வரண்டு விட்டது. இதனுல் இங்குள்ள மக்கள் குடிப்பதற்குக் குடிதண்ணீர் இல்லாது மிகவும் கஷ்டப் படுகின்ருர்கள். அத்துடன் இங்குள்ள வைத்தியசாலை வார்டுகளில் உள்ள நோயாளிகளும் கூடத் தண்ணீர் இல்லாது உவர்த் தண்ணீரையே குடித்து வருகின்றனர். உவர்த் தண்ணீரைக் குடித்ததினுல் சில குழந்தைகள் நோய்களுக்குள்ளாகி வருகின்றனர்" என்று பிரஸ்தாப மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### இலங்கைக் குழு..

பது பற்றி ஆராய்வதற்காக மூன்றுபேர் கொண்ட குழு ஒன்று இலங்கையிலிருந்து இந்தியா சென்றுள்ளது. இவர்கள் மகாராஷ்ரா, கோவா ஆகிய மாநிலங்களுக்கு விஜயம்செய்து இது பற்றி ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கார் குண்டு 20 பேர் பலி

(தெஹ்ரான்)

ஈரானின் தலைநகரானதெஹ்ரானில் நேற்றுக்காலை மீண்டும இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பில் இருபது பேர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். ஒரு மாத காலத்தில் இங்கு இடம்பெற்ற மூன்ருவது கார்குண்டுவெடிப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

### குடாநாட்டில்...

டைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளோரில் அதகமானேர் பாதசாரிகளாவார்.

### பனம் உணவு சிற்றுண்டிச்சாலை

(சுண்டுக்குளி)

நவீனமயப் படுத்தப்பட்ட பனம் உணவுகளைக் கொண்ட சிற்றுண்டிச்சாலை ஒன்று இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் சந்தைக் கட்டிடத்தில் இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையினுல் திறந்து வைக்கப்படவுள்ளது. வடபகுதியில் திறந்து வைக்கப் படும் முதலாவது பனம் உணவுச் சிற்றுண்டிச்சாலை இதுவாகும்.

### சிப்பாய்கள் படும்பாடு!

முன்பு வீதிக்கு வந்தபோது மிஞ்சியவர்கள் இப்போது கோட்டைக்குள் இருந்து கெஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாஸ் பெறுவதற்காக கோட்டைக்குள் செல்லும் வாகன உரிமையாளர்களைக் கண்டதும் நமட்டுச்சிரிப்பு செய்யும் சில சிப்பாய்கள் "எப்படி சொகம்?" என்று கேட்டுவிட்டு தமக்குத்தேவைப் படும் சில அத்தியாவசியப் பொருட்களை வெளியில் வாங்கித் தருமாறுகோரி அதற்குரிய பண நோட்டுகளையும் நீட்டுகின்ருர்களாம்.

'மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல்' பிரஸ்தாப வாகனக்காரர்கள் தர்ம சங்கடத்திற்குள்ளாவதாகவும் அறிய வருகின்றது. இதனுல் தர்மசங்கட நிலைக்கு இவர்கள் உள்ளாவதாகவும் அறியவருகின்றது.

### இளைஞன் பலி

அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரியநிலாவளி என்ற இடத்தில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பெண்ணின் சடலம்

(புலோலி)

நிர்வாண நிலையில் வீதியோரத்தில் இறந்துகிடக்கக்காணப்பட்ட இனந்தெரியாத பெண் மணி ஒருவரின்சடலம் மந்திகை அரசினர் வைத்திய சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் வல்லைக்கு அண்மையில் காணப்பட்ட இச்சடலம் சில இளைஞர்களால் எடுத்து வரப்பட்டு மந்திகைஅரசினர் வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டது.

### தொண்டா தமிழகம் பயணம்

அமைச்சர் தொண்டமான் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று தமிழகம் பயணமானுர். இம் மாதம் 24ஆம் திகதி இவர் கொழும்பு திரும்புவார்.

### முற்றுப்புள்ளி

(சுன்ஞகம்)

இரவு, பகலாக மின் ஊழியர்களும், இளைஞர் குழுக்களும் எடுத்து வந்த தீவிர நடவடிக்கையின் பயனுக வலிகாமம் வடக்கில் சட்டவிரோத மின் பாவனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை காரணமாக மனிதஉயிரிழப்புக்களும், பாதிப்புகளும் ஏற்படாது தடுக்கப் பட்டமைக்கு மக்கள் மத்தியில் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது.


### சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி தெற்கு, காட்டுப்புலம் காளியம்பாள் ஆலய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| (1) 2901, | (2) 731, | (3) 2035, | (4) 1523, |
| (5) 1746, | (6) 2170, | (7) 593, | (8) 2629, |
| (9) 1195, | (10) 3337, | (11) 1129, | (12) 1908, |
| (13) 3056, | (14) 2881, | (15) 1045, | (16) 2656, |
| (17) 2895, | (18) 1296, | (19) 2769, | (20) 1934, |
| (21) 725, | (22) 3071, | (23) 2802, | (24) 49, |
| (25) 2019, | (26) 135, | (27) 1841, | (28) 2187, |
| (29) 1968, | (30) 424, | (31) 322, | (32) 207, |
| (33) 3011, | (34) 1744, | (35) 2619. | |

15. 9. 1986-க்கு முன்னர் பரிசுப் பொருட்களை மீட்டுக்கொள்ளவும்.

செயலாளர்: ப. உதயகுமார் R/25321


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 20-8-1986 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437